Register No. | | | | | | | | |

TA5A

5862-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the general rules relating to the calculation of Limitation periods.

   கால வரையறைக் காலத்தை கணக்கிடுவது குறித்த பொது விதிகளை விவாதிக்கவும்.

2. "The court cannot invoke its inherent powers when there is specific provisions"-Explain.

   "ஒரு குறிப்பிட்ட விதி இருக்கும் பொழுது நீதிமன்றம் தனது உள்ளார்ந்த அதிகாரங்களை எழுப்ப முடியாது" - விளக்குக.

3. Explain the various steps to be taken for executing a money decree by the sale of immovable property of the judgement debtor.

   தீர்ப்புக் கடனாளியின் அசையாச் சொத்தை விற்பனை செய்து பணத் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பலவாறான நடவடிக்கைகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the grounds for setting aside the ex parte order under the Civil Procedure Code.

   ஒருதலைபட்ச உத்தரவினை நீக்கறவு செய்வதற்கான காரணங்களை உரிமையியல் சட்டத்தின் கீழ் விளக்குக.

5. What is meant by temporary injunction? State the principles and discretionary powers of the court in granting temporary injunction.

இடைக்கால தடை ஆணை என்றால் என்ன? நீதிமன்றம் இடைக்கால தடை ஆணை வழங்குவதற்கான கோட்பாடுகளையும் தன் விருப்புரிமை அதிகாரம் பற்றியும் கூறுக?

6. Explain the original and appellate jurisdiction of the Supreme Court.

உச்ச நீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார வரம்பு பற்றி விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Joinder of parties

வழக்கினர்களை சேர்த்தல்

(b) Reference

சாட்டுகை

(c) Acknowledgement under the Limitation Act, 1963.

1963–ஆம் ஆண்டின் காலவரம்பு சட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு

(d) Foreign Judgement

அயல்நாட்டு தீர்ப்பு

(e) Precept

பற்றாணை

(f) Proclamation of Sale

விற்பனை சாற்றுவிப்பு

(g) Summons

அழைப்பாணை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:

8. Ramesh is a tenant who is in possession of a building for a long time. He was disturbed from possession by the landlord Suresh otherwise than in accordance with law. Ramesh filed a suit for permanent prohibitory injunction. Whether the court has got power to grant temporary injunction during the pendency of suit. Decide and give reasons.

ரமேஷ் என்பவர் வாடகைதாரராக ஒரு கட்டிடத்தில் அதிக காலமாக உள்ளார். அவரை அந்த இடத்திற்கு உரிமையாளரான சுரேஷ் என்பவர் சட்டத்திற்கு புறம்பாக தொந்தரவு செய்கிறார். ரமேஷ் நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டி ஓர் வழக்கு தாக்கல் செய்கிறார். நீதிமன்றத்திற்கு இடைக்கால உறுத்துக்கட்டளை வழக்கு நிலுவையிலுள்ள போது வழங்க அதிகாரம் உள்ளதா? முடிவு செய்க, காரணம் கொடுக்கவும்.

9. In a suit by Venkat against Govindaraj for recovery of money, the court by invoking Section 151 CPC, appointed a commissioner to seize certain account books of the defendant Govindaraj. Govindaraj challenged the appointment of the commissioner before the High Court. Will he succeed? Give reasons.

தனக்கு பணம் தர வேண்டும் என்று வெங்கட் என்பவர் கோவிந்தராஜுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் நீதிமன்றமானது தன்னுடைய உள்ளார்ந்த அதிகாரத்தை பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் வழி பயன்படுத்தி ஒரு ஆணையரை நியமித்து பிரதிவாதி கோவிந்தராஜின் சில கணக்கு புத்தகங்களை பறிமுதல் செய்து வர உத்தரவு பிறப்பித்தது. கோவிந்தராஜ் ஆணையரை நியமித்த ஆணையை மறுதலித்து உயர்நீதிமன்றம் செல்கிறார். அவர் வெற்றிபெறுவாரா? காரணங்களை கூறுவும்.

10. Ashok has been prosecuted in a criminal court for the offence of kidnapping and he was acquitted. After his acquittal he filed a suit against the father of the minor girl in a civil court for recovery of his expenses incurred to defend his criminal case. Whether the suit is maintainable?

பிள்ளைபிடித்தல் குற்றத்திற்காக அசோக் என்பவர் மீது குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று அவர் விடுதலை பெறுகிறார். அதன்பின் இளவர் பெண்ணின் தகப்பனார் மீது குற்ற வழக்கை நடத்த செலவு செய்த தொகை கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கிறார். இந்த வழக்கு நிலைக்கத்தக்கதா?

---

Register No. | | | | | | | | |

**TA5B** 5863-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe and differentiate investigation, inquiry and trial.

   புலன் விசாரணை, வழக்காய்வு மற்றும் குற்ற விசாரணை இவற்றை விவரித்து வேறுபடுத்திக் காட்டவும்.

2. Discuss the trial procedure before a Court of Sessions.

   அமர்வு நீதிமன்றத்தின் முன்னால் நடைபெறும் வழக்கு விசாரணை பற்றி விவாதிக்கவும்.

3. Describe the salient features of the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015.

   சிறார் நீதிபரிபாலன (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ன் முக்கியப் பண்புகளை எழுதுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the provisions of the Criminal Procedure Code, 1973 relating to maintenance of wive's, children and parents.

   குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-ன் படி மனைவியர், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் வாழ்க்கை பொருளுதவி கோருதல் தொடர்பான வகைமைகளை விளக்குக.

5. Define remand and custody. Discuss the maximum period for which an under trial prisoner can be detained?

காவல் வைப்பு மற்றும் சிறை வைப்பு குறித்து விளக்கவும். விசாரணைக் கைதி ஒருவரை இருத்திவைக்கப்பட வேண்டிய அதிகபட்சகால அளவினைப் பற்றி விவாதி.

6. Person once convicted or acquitted not to be tried for the same offence twice – Explain.

ஒரு முறை தண்டிக்கப்பட்டவர் அல்லது விடுதலை செய்யப்பட்டவர் அதே குற்றத்திற்காக மீண்டும் விசாரணை செய்யப்படுதல் கூடாது – விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Attachment

பற்றுகை

(b) Appeal

மேல்முறையீடு

(c) Complaints to Magistrate

நடுவர்களிடம் முறையீடுகள் செய்து கொள்ளுதல்

(d) Compounding of offences

குற்றங்களைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ளுதல்

(e) Judgement

தீர்ப்புரை

(f) Limitation for taking Cognizance

விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கான கால வரம்பு

(g) Legal Aid.

சட்ட உதவி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is tried for the offence of theft. A want to compound the offence. Discuss.

'அ' என்பவர் திருட்டு குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார். 'அ' இக்குற்றத்தை சட்டப்படி சமரசம் செய்து தீர்த்து கொள்ள விரும்புகிறார். விவாதி.

9. 'A' is tried upon a charge of theft as a servant and acquitted. While the acquitted remains in force, he is charged with criminal breach of trust. Decide the legality.

'அ' என்ற பணியாளர் திருட்டு குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு, பின் விடுதலை செய்யப்படுகிறார். விடுதலை நிலுவையில் இருக்கும் போது அவர் மீது குற்றமுறு நம்பிக்கை மோசடி வழக்கு வனையப்படுகிறது. அதன் சட்டத் தன்மையை தீர்வு செய்க.

10. A Metropolitan Magistrate after conducting summary trial imposes a fine of Rs. 2,000. Discuss the validity of the judgement.

ஓர் பெருநகர் குற்றவியல் துறை நடுவர் சுருக்க முறை விசாரணை நடத்தி ரூ. 2,000 அபராதம் விதிக்கிறார். இத்தீர்ப்புரையின் செல்லும் தன்மையினை விவாதிக்க.

Register No. | | | | | | | | |

# TA5C

**5864–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

## ENVIRONMENTAL LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

### PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Trace the evolution of Environmental Jurisprudence through the decisions of Supreme Court.

   உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மூலமாக சுற்றுச்சூழல் சட்டவியலின் ஆரம்பத்தை ஆராய்க.

2. Discuss the various provisions of the Cr.P.C regarding abatement of environmental pollution.

   சுற்றுச்சூழல் மாசுகளை அகற்றுவது குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள வகைமுறைகளை விவாதிக்கவும்.

3. Discuss the role of Central Pollution, Control Board in controlling Pollution.

   மாசுகளை கட்டுப்படுத்துவதில் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பங்கினை விவாதிக்க.

### PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the importance of Kyoto Protocol on climate change.

   தட்ப வெப்ப நிலை குறித்த கியோட்டோ உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை விவாதிக்க.

5. "Polluter pays Principle" is an essential feature of sustainable development-comment.

"மாசுக்கேடு விளைவிப்பவரே இழப்பீடு செலுத்தும் கோட்பாடு" நீடித்த வளர்ச்சியின் முக்கிய சாராம்சமாக விளங்குகின்றது – விமர்சிக்க.

6. Discuss the effect of Environment Impact Assessment issued by the Ministry of Environment and Forest.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் சுற்றுச்சூழலின் செயல் விளைவு மதிப்பீடு அளிப்பதின் விளைவுகளை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Agenda 21

நிகழ்ச்சி குறிப்பு 21

(b) Mass Tort Action

பெருந்தீங்கு நடவடிக்கை

(c) Eco-Sensitive Zone

பல்லுயிர் உணர்திறன் பகுதி

(d) Noise Pollution

இரைச்சல் மாசுபாடு

(e) Reserve Forests

ஒதுக்கப்பட்ட காடுகள்

(f) Sanctuaries

சரணாலயங்கள்

(g) Hazardous Waste

அபாயகரமான கழிவு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The wild life officer allowed film shooting at point Calimere sanctuary of wetlands where rare birds migrated. 'Birds watchers' an ornithologist group field a petition seeking ban on shooting the film. Decide.

அரிய பறவைகள் இடம் பெயர்வு மேற்கொள்ளும் நன்செயல் நிலங்களான காளிமர் முனை சரணாலயத்தில் படப்பிடிப்பு எடுக்க வன விலங்கு அதிகாரி அனுமதித்தார். பறவை ஆர்வலர்களான பறவையியலாளர் இயக்கம் படப் பிடிப்பு செய்வதை தடைசெய்ய வேண்டும் என்று வழக்கிட்டனர். தீர்மானிக்க.

9. As per the existing rules Cannon India agreed to set up centre to collect unused dead mobiles but failed to do so. Activists insisted the State Pollution Control Board to cancel the environmental clearance - Advise.

நடைமுறையில் உள்ள விதிகளின் படி கேனான் இந்தியா பயனில்லா உபயோகமற்ற செல்போன்களை சேகரிப்பதற்கான இடம் அமைப்பதாக உறுதியுரை அளித்துவிட்டு அமைக்கத் தவறியது. ஆதலால் ஆர்வலர்கள் சுற்றுச்சூழல் அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என்று மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் மனுத் தாக்கல் செய்தனர். ஆலோசனை வழங்கவும்.

10. The Government of Kerala decided to convert the open space into a residential area. The people residing nearby objected to the decision of the government and approached the Court-Decide.

கேரளா அரசு திறந்த வெளியை குடியிருப்புப் பகுதியாக மாற்றியமைக்க முடிவெடுத்தது. அருகாமையில் வசிக்கும் மக்கள் அரசின் இத்திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்து நீதிமன்றத்தை அணுகினர். தீர்மானிக்க.

Register No. | | | | | | | | |

# TA5D

5865–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

## LABOUR LAW — II

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe the provisions of the Employee's Compensation Act, 1923 relating to the amount of compensation payable to a workman in case of an injury causing, death, permanent total disablement and temporary disablement.

   தொழிலாளர் இழப்பீடுச் சட்டம், 1923-ன் கீழ் மரணம், நிரந்தர முழுமையான உடற் தகுதியிழப்பு மற்றும் தற்காலிக உடற்தகுதியிழப்பு போன்றவைகளுக்கு தொழிலாளிக்கு வழங்கப்படும் இழப்பீடுத் தொகை குறித்த வகையங்களை விவரிக்க.

2. Analyse the scope of the Payment of Gratuity Act, 1972 and explain, the provisions relating to 'exemption' and 'forfeiture' of gratuity under the Act.

   1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் நோக்கத்தை ஆய்வு செய்க. இச்சட்டத்தின் கீழ் பணிக்கொடை 'விலக்கு' மற்றும் 'பறிமுதல்' தொடர்பான பிரிவுகளை விளக்குக.

3. Define 'Factory'. What are the safety measures recommended by the Factories Act, 1948.

   'தொழிற்சாலை' — வரையறு. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்புக்கான விதிமுறைகள் யாவை?

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the kinds of benefits and the eligibility to claim the same under the Maternity Benefits Act, 1961.

   1961-ம் ஆண்டு மகப்பேறு நலன்கள் சட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய நலன்கள் மற்றும் அதைப் பெறுவதற்கான தகுதிகள் குறித்து எடுத்துரைக்க.

5. Describe the administrative machinery of the Employee's State Insurance Scheme.

தொழிலாளர் அரசு காப்பீடுத் திட்டத்தின் நிருவாக அமைப்பு குறித்து விவரிக்க.

6. Explain the provisions relating to 'working hours' and 'holidays' under The Tamil Nadu Shops and Establishments Act, 1947.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ன் கீழ் 'வேலை நேரம்' மற்றும் 'விடுமுறை' குறித்த சட்ட வகையங்களை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Schedule Injury

அட்டவணைக் காயம்

(b) Continuous service

தொடர்ச்சியான பணி

(c) Disqualification for getting bonus

மீதூதியம் பெற தகுதியற்றவர்கள்

(d) ESI Corporation

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்

(e) Employee's Family Pension Scheme

தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

(f) Manufacturing Process

தயாரிப்பு செயல்பாடு

(g) Welfare officers in factories.

தொழிற்சாலைகளில் நல அதிகாரிகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Giri, is a workman is an industrial establishment. His monthly salary is Rs. 10,000/-. Due to violent activities at the time of strike along with other workers, he was terminated from service during the accounting year 2015-2016. He claimed bonus for the above said accounting year. The Management refused. Decide.

கிரி என்பவர் ஒரு தொழில் நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளி. அவரின் மாத சம்பளம் ரூ. 10,000/-. வேலை நிறுத்தத்தின் போது பல தொழிலாளர்களுடன் சேர்ந்து செய்த வன்முறை செயல்களுக்காக, 2015-2016 கணக்காண்டில் அவர் வேலையிலிருந்து பணி முறிவு செய்யப்படுகிறார். கிரி மேற்சொன்ன கணக்காண்டிற்கு மீதூதியம் கோருகிறார். நிர்வாகம் மறுக்கிறது. தீர்மானிக்க.

9. Banu is a woman working in Tea Estate. Due to pregnancy, without giving notice to the employer, stopped working. After Delivery, she claimed maternity benefit. She worked only for 100 days in the preceding 12 months period. Decide whether she is entitled for maternity benefit?

பானு என்ற பெண்மணி ஒரு தேயிலை தோட்டத்தில் பணியாற்றி வருகிறார். முதலாளிக்கு எந்தவித அறிவிப்பும் தராமல், குழந்தை பிறப்பிற்காக வேலைக்கு வரவில்லை. குழந்தை பிறந்த பிறகு அவர் முதலாளியிடமிருந்து மகப்பேறுநலன்களைக் கோருகிறார். அவர் முந்தைய 12 மாத காலத்தில் 100 நாட்கள் மட்டுமே வேலைக்கு வந்துள்ளார். அவருக்கு மகப்பேறு நலன் கிடைக்குமா என தீர்மானிக்க?

10. Ramu, an automobile mechanic, employing 20 persons, repairs motor cycles and cars in open space on the road side. To carry out the painting and welding, he used a small shed and the electricity. Whether it is a factory? Decide.

ராமு என்ற தானியங்கி பழுது பார்ப்பவர் சாலையோரத்தில் 20 பணியாளர்களை பணிக்கு அமர்த்தி இரு சக்கர வாகனம் மற்றும் மகிழுந்து பழுது பார்ப்பது, வாகனங்களுக்கு வர்ணம் பூசும் பணியும் செய்து வருகிறார். அப்பணிகளை மேற்கொள்ள ஒரு சிறு கூரையும் மின்சாரமும் பயன்படுத்துகிறார். இது தொழிற்சாலை ஆகுமா? முடிவு செய்க.

———————

Register No. | | | | | | | | |

**TA5E**

**5866-23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is income under the Income Tax Act, 1961? Explain those incomes which do not form part of the total income of an assessee?

   வருமானம் என்றால் என்ன என்பதனை வருமான வரிச்சட்டம் 1961ன் கீழ் விளக்குக. வரி செலுத்துபவரின் வருமானத்தில் எந்த வருமானம் சேராது என்பதை பட்டியலிட்டு விளக்குக.

2. Define Capital Gain. Explain the mode of computation of Capital Gain.

   மூலதன ஆதாயம் என்பதை வரையறுத்து அதனை கணக்கிடும் முறையை விளக்குக.

3. When is a sale or purchase said to take place in the course of Inter-State trade or commerce? Explain with decided cases.

   எப்பொழுது சரக்குகளின் விற்பனை அல்லது வாங்குதல் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் அல்லது வர்த்தமாகக் கருதப்படுகின்றது? தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் மூலம் விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the provisions relating to Set off and carry forward of losses under the Income Tax Act, 1961.

   வருமான வரிச்சட்டம், 1961ன் கீழ் இழப்புகளை சரிகட்டுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல் குறித்த வகையங்களை விளக்குக.

5. Write down on annual value of house property.

வீட்டுச் சொத்தின் ஆண்டு மதிப்பு பற்றி விரிவாக விளக்குக.

6. What are the salient features of IGST (Integrated Goods and Services Tax Act, 2017)?

ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017-ன் முக்கியக் கூறுகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Art.286 (1-B)-Constitutional exemption

சரத்து 286 (1-B) அரசமைப்புச் சட்ட விலக்குகள்

(b) Canons of Taxation

வரிச்சட்டத்தின் விதிமுறையமைவு

(c) Gratuity

பணிக்கொடை

(d) Assessment year

மதிப்பீட்டு ஆண்டு

(e) Not ordinarily resides in India under the Income Tax Act

வருமான வரிச்சட்டத்தின் கீழ் இந்தியாவில் வழக்கமாக குடியிருப்பு இல்லாதவர்

(f) Time and Value of Supply

நேரம் மற்றும் மதிப்பீடு-வழங்கல்

(g) Kinds of duties.

பல்வேறு வகையான சுங்கவரிகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Santhosh is aged about 82 years, his annual income for the previous year 2022-2023 is Rs.9,00,000. Compute the tax liability of Mr. Santhosh, for the assessment year 2023-2024.

Mr. சந்தோஷ், 82 வயது உடைய முதியவர். அவரின் ஆண்டு வருமானம், முந்தைய ஆண்டு 2022-2023ல் ரூபாய் 9,00,000. திரு. சந்தோஷ் அவர்களின் வரி செலுத்தும் தொகையை மதிப்பீட்டு ஆண்டு 2023-2024க்கு கணக்கிடுக.

9. Mrs. Avantika, is working as fashion designer in Bangalore. Her monthly income and deductions are as follows during the previous year 2022-2023.

| Income Rs. | | Deductions Rs. | |
|---|---|---|---|
| Basic Pay | 30,000 | C.P.S. | 3,200 |
| DA | 10,000 | SPF | 100 |
| H.R.A. | 18,000 | | 3,300 |
| M.A. | 600 | | |
| | 58,600 | | |

She pays a house rent of Rs.8,000 per month. She pays Rs.2,000 per month towards, PLI (Postal Life Insurance). Calculate the tax liability of Mrs. Avantika for the assessment year 2023-2024.

திருமதி. அவந்திகா, ஆடை வடிவமைப்பாளராக பெங்களூருவில் பணிபுரிந்து வருகிறார். அவருடைய வருமானம் மற்றும் பிடித்தம் பின்வருமாறு:

| வருமானம் ரூ. | | பிடித்தம் ரூ. | |
|---|---|---|---|
| அடிப்படை சம்பளம் | 30,000 | ஓய்வூதிய திட்டம் | 3,200 |
| அகவிலைப்படி | 10,000 | சிறப்பு சேமநல நிதி | 100 |
| வீட்டுப்படி | 18,000 | | 3,300 |
| மருத்துவபடி | 600 | | |
| | 58,600 | | |

அவர் வீட்டு வாடகையாக மாதம் ரூ.8,000 செலுத்துகிறார். அஞ்சல் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 2,000 மாதம் செலுத்துகிறார். வரிவிதிப்பு ஆண்டு 2023-2024க்கு திருமதி. அவந்திகா செலுத்த வேண்டிய வரித் தொகையினை கணக்கிடுக.

10. Rajesh imports goods from Canada on 10.08.2022 and pays an import duty of Rs.20,00,000. Subsequently, he re-exports the goods to South Africa on 20.10.2022 and claims draw back. Is he entitled for duty draw back? If yes what is the amount he will get? If no what is the reason?

10.08.2022 அன்று ரூபாய் 20,00,000க்கு சுங்க இறக்குமதி வரி செலுத்தி ராஜேஸ் என்பவர் கனடாவில் இருந்து சரக்குகளை இறக்குமதி செய்கிறார். பின்னர் 20.10.2022 அன்று அச்சரக்குகளை தெற்கு-ஆப்பிரிகாவிற்கு மறு-ஏற்றுமதி செய்துவிட்டு செலுத்திய இறக்குமதி வரியைத் திரும்பப் பெற கோரிக்கை வைக்கிறார். அவர் இறக்குமதி வரியைத் திரும்பப்பெற தகுதியுடையவரா? ஆம் எனில் அவர் எவ்வளவு பணம் திரும்பப் பெறக்கூடும், இல்லை எனில் அதற்கான காரணம் யாது?

---